[2013 ஏப்ரல் 9

190—

மணி மண்டபம்

***27718—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணி மண்டபம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு கோட்டை அமைத்தும், கயத்தாறில் அன்னார் தூக்கிலிடப்பட்ட இடத்தில் நினைவுப் பூங்கா அமைக்கப்பட்டும் சுற்றுலாத் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நினைவு மண்டபம் அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைத் தேடி மக்கள் சென்ற நிலையை மாற்றி, மக்களைத் தேடி அரசு செல்கின்ற அற்புதமான திட்டமான (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா திட்டம்' தந்திட்ட மக்கள் போற்றும் மகத்தான தலைவி மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் வணங்கி, கேட்ட உடனே வரம் தரும் அன்னை ஆதிபராசக்தியைப் போல கோவில்பட்டி தொகுதி மக்களின் நீண்டகால கனவை நனவாக்கி, நேற்றைய தினம் இந்த மாபெரும் அவையிலே வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்பாக கோவில்பட்டி தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தந்து, இந்த ஆண்டு முதல் செயல்பட ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் தொகுதி மக்களின் சார்பாக என் நெஞ்சம் நிறைந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி வணங்குகிறேன்.*

2013 ஏப்ரல் 9]

எதை, எப்போது, எங்கே செய்ய வேண்டும் என்ற தெளிவான சிந்தனையோடு சிறப்பாகச் செய்யும் அறிவு, ஆற்றல், தெளிவு பெற்றவர்தான் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கவிஞர்களுக்கு, பிறந்த இடத்தில் பெருமை, வீரர்களுக்கு வீரம் விதைக்கப்பட்ட, மறைந்த இடத்தில்தான் பெருமை. இதைப் புரியாத சிலர் வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்ந்த இடத்தில் கோட்டை கட்டுகிறேன் என்று, அதிலும் வரவேற்பு வளைவில் தன் பெயரைப் பதித்தவர்கள் மத்தியில், வீரம் விதைக்கப்பட்ட இடத்தை மறந்து செயல்பட்ட நிலையை மாற்றி, மாற்றானை மறுதலித்து, வீரபாண்டிய கட்டபொம்மனைப் போலவே மாற்றான் தாய் மனப்பான்மையோடு தமிழகத்தைப் புறக்கணிக்கும் மத்திய அரசை, தனக்கே உரிய வீரம், விவேகம், ஆற்றல், நிறைமதி கொண்டு, பொறுமையுடன் போராடி (மேசையைத் தட்டும் ஒலி) வென்றெடுக்கும் எங்கள் அன்னையே, மானம் ஒன்றே பெரிதெனக்கொண்டு மாற்றானுக்கு மண்டியிட மறுத்து மரணத்தைத் தழுவிக்கொண்ட மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு, வீரத்தின் விளைநிலமாம் கயத்தாறில் மணி மண்டபம் அமைக்க ஆவன செய்ய வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்குப் பாடுபட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள், தேசத் தலைவர்கள், தியாகிகள், தமிழறிஞர்கள், வரலாற்றில் வாழும் சான்றோர்கள், ஆன்றோர்கள் என மாபெரும் மனிதர்களின் தொண்டினை, உழைப்பை எதிர்வரும் தலைமுறையினர் அறிய வேண்டும் என்கிற நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவர்கள் சிறப்புகளையும், பெருமைகளையும் என்றென்றும் நினைவில் நிறுத்தி போற்றிப் புகழ்ந்திடும் வகையில் இத்துறையால் 55 நினைவகங்கள், 3 அரங்கங்கள், 5 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா உருவாக்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, சென்னையில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர்

அவர்களுக்கும், சுயமரியாதைச் சுடர் ஜீவரத்தினம் அவர்களுக்கும் மணி மண்டபங்கள், விடுதலைப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களுக்கு, அவர் தூக்கிலிடப்பட்ட இடமான சேலம் மாவட்டம், சங்ககிரியில் ரூபாய் 60 இலட்சம் செலவில் நினைவுச் சின்னம், தமிழ்நாடு எனப் பெயர் சூட்டுவதற்காக இன்னுயிர் ஈந்த தியாகி சங்கரலிங்கனார் அவர்களுக்கு விருதுநகர் மாவட்டத்தில் மணி மண்டபம், வீர மங்கை வேலு நாச்சியார் அவர்களுக்கு 60 இலட்சம் ரூபாய் செலவில் சிவகங்கையில் நினைவுச் சின்னம், மொழிப்போர் தியாகி ஆர். சிதம்பரநாதன் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், களியக்காவிளையில் திருவுருவச் சிலை, கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ரூபாய் 10.80 இலட்சம் செலவில் திருவுருவச் சிலை, திருச்சிராப்பள்ளியில் மொழிப் போர் தியாகி கீழப்பழூர் சின்னசாமி அவர்களுக்கு திருவுருவச் சிலை, இப்படி மாபெரும் தலைவர்களுக்கெல்லாம் சிலைகள் வைத்து அழகுபார்த்துக்கொண்டிருப்பது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் வளம் பெற உழைத்த தலைவர்களுக்கும், தமிழக மக்களின் வாழ்வு மேன்மையடைய பாடுபட்ட சான்றோர்களுக்கும் நினைவுச் சின்னம் அமைத்து, பெருமைப்படுத்துவதில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நிகராக இதுவரை எந்தத் தலைவரும் இருந்ததும் இல்லை, இனி இருக்கப் போவதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையான கயத்தாறில் வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணி மண்டபம் அமைக்க வேண்டுமென அவர் தெரிவித்த கருத்துரு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான கவனத்திற்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.

திரு. கடம்பூர் ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக ஆவன செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு நன்றிதனைத் தெரிவித்து, சென்னையிலே வீரபாண்டிய

2013 ஏப்ரல் 9]

கட்டபொம்மனுக்கு திருவுருவச் சிலை அமைத்திட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்து, மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதையும் நிறைவேற்றிட வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிவழி மாநிலம் அமையவும், தமிழகத்திற்கு திருத்தணி போன்ற இடங்கள் கிடைக்கவும் போராட்டத்தில் ஈடுபட்ட, அதனுடைய முன் வரிசையிலே செயல்பட்ட மாண்புமிகு ம.பொ. சிவஞானம் அவர்களுக்கு, அவருடைய பிறந்த நாளில் அரசு விழா கொண்டாட ஆவன செய்யப்படுமா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறிவின் திருவாய், ஆற்றலின் உருவாய், அன்பின் சின்னமாய், பண்பின் சிகரமாய், பரிவின் விரிவாய், பாசத்தின் வடிவாய்" திகழும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தியாகிகளுக்கும், சான்றோர்களுக்கும், மொழிக்காக போராடியவர்களுக்கெல்லாம் பிறந்த நாள் விழாக்களை எடுத்து, நினைவுச் சின்னங்களையும் எழுப்பி, அவர்களுடைய புகழுக்குப் பெருமை சேர்க்கின்ற நிகழ்ச்சியை நடத்தி வருகிறார்கள். அதுபோன்று உறுப்பினர் அவர்கள் கோரிய திரு. ம.பொ. சிவஞானம் அவருடைய பிறந்த நாள் விழாவை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

[2013 ஏப்ரல் 9

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்த நமது நாட்டின் உண்மையான முதல் சுதந்திரப் போராட்டத் தியாகி, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தேச பக்தி, அவருடைய தியாகம் யாராலும் மறக்க முடியாதவையாகும். ஆகவே, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் கயத்தாறில் தமிழக அரசு ஒரு மணிமண்டபத்தை எழுப்பும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வினாவை எழுப்பி, அந்த வினா மறையும் முன்பே அடுத்த வினாடியே சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை மதிக்கும் மாண்பைப் பெற்ற மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) நானும், என் தொகுதி மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களில் வணங்கி சமர்ப்பிக்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பிட்ட கரங்கள் விலகும் முன்னே, வரம் கொடுக்கும் எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) கோரிக்கை வைத்து ஒரு நிமிடம் ஆகும் முன்பே கோரிக்கையை நிறைவேற்றி தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கயத்தாறில் வீரம் விளைவித்து அந்த மண்ணுக்கு பெருமைச் சேர்த்த வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு செய்தித் துறையின் சார்பாக பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள்.*

2013 ஏப்ரல் 9]

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்த அருமையான அறிவிப்புக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மதுரையில் ஏற்கெனவே தெய்வத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு எப்படி அரசு மரியாதை கொடுத்ததோ, அதேபோன்று மாவீரன் அழகு முத்துகோனுக்கும், தீரன் சின்னமலைக்கும், தியாகி விஸ்வநாததாசுக்கும், மரியாதைக்குரிய திரு. கக்கன்ஜி போன்ற தேசியத் தலைவர்களுக்கும் அரசு விழா எடுத்து கொண்டாடுவதைப் போல, தெலுங்கு இன மக்களின் எழுச்சி நாயகர், நாயக்கர் வம்சத்தில் அரசாட்சி புரிந்தவர்களில் மிகச் சிறந்தவர், மக்களாட்சித் தத்துவத்திலும், சாதி சமய ஒற்றுமையிலும், சைவ, வைணவ மக்களின் ஒற்றுமைக்கும், கலைத் துறைக்கும், வீரத்திலும் சிறந்து விளங்கிய, மதுரையை ஆண்ட மன்னர்களில் மிகச் சிறந்த மாமன்னர் திருமலை நாயக்கர் அவர்களுக்கு அரசு விழா எடுத்து கொண்டாட வேண்டுமென அன்புடன் நான் கேட்டுக்கொள்கிறேன். நாயக்கர் சிலையை மஹாலில் முன்பகுதியில் வைத்து, அந்த Palace Road என்னும் பெயரை மாற்றி திருமலை நாயக்கர் சாலையெனப் பெயரிட வேண்டுமென அன்புடன் கோரிக்கை வைக்கின்றேன்.

மகாகவி பாரதியார் பணிபுரிந்த சேதுபதி பள்ளியிலே அவருக்கு ஒரு சிலையை வைத்து இருக்கின்றார்கள். அதனை வெண்கலச் சிலையாக அரசு வைக்க வேண்டும், இல்லையென்றால் நாங்கள் சிலையை வைப்பதற்கு நீங்கள் அனுமதி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட பாண்டித்துரை தேவர் அவர்களுக்கு மதுரையிலே ஒரு சிறிய சிலையை வைத்து இருக்கின்றார்கள்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஆர். சுந்தர்ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு மேலே ஒரு மேம்பாலம் கட்டப்பட வேண்டும். சிலை வைக்கப்பட்டிருக்கின்றது. அந்தச் சிலையை வெண்கலச் சிலையாக மாற்ற வேண்டும். உலகப் பொதுமறை இயற்றிய திருவள்ளுவருக்கு கலெக்டர் அலுவலகத்திற்கு முன்னாலே சிறிய

சிலையாக வைத்திருக்கின்றார்கள். அந்தச் சிலையையும் தயவு செய்து அம்மா அவர்கள், ஒரு நல்ல வெண்கலச் சிலையாக மாற்றித்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்திலே உண்மையாகவே இப்போது சொன்ன அத்தனையையும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, நன்றியுடன் விடைபெறுகின்றேன். அம்மா வாழ்க, வளர்க என்று கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கின்ற அனைத்துக் கோரிக்கைகளும் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்கள் முதல் சுதந்திரப் போராட்ட வீரர் என்ற முறையிலே மணி மண்டபம் எழுப்புவதற்கு அறிவித்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வரக்கூடிய இளம் தலைமுறையினர் காங்கிரஸ் கட்சியினர்தான் விடுதலைப் போராட்டத்தில் போராடியவர்கள் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முன்பாகவே வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களிலிருந்து, திப்பு சுல்தானிலிருந்து, வீரமங்கை வேலு நாச்சியாரிலிருந்து (மேசையைத் தட்டும் ஒலி) போராடியிருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அல்ல என்ற முறையிலே (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அந்த அறிவிப்பு வரலாற்றுச் சிறப்புமிக்க ஓர் அறிவிப்பு என்ற முறையிலே வரவேற்று, ஒரு சிறுபான்மை சமுதாயத்தில் இஸ்லாமியராக இருந்த திப்பு சுல்தான் அவர்கள், வீரமங்கை வேலு நாச்சியார் ஆகியோருடைய வாழ்க்கை வரலாறு, நட்பு, மிக மிகக்

கற்றுக்கொள்ளத்தக்க, சமுதாயத்திற்கு மிகவும் உதவியாக இருக்கக்கூடியது. ஆகவே, திண்டுக்கல் மாவட்டம் இஸ்லாமிய மக்களும் அதிகமாக நிரம்பி இருப்பதனால், திப்பு சுல்தான் அவர்களுக்கு, இப்போதல்ல, எதிர்காலத்தில் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு சென்று, ஒரு மணிமண்டபம் அமைப்பதற்கு மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 18-7-2011 அன்று பாப்பாரப்பட்டியில் தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு மணி மண்டபம் அமைத்துக் கொடுத்து, அதைத் திறந்து வைத்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். சீர்காழியில் தமிழிசை மூவர் மணி மண்டபத்தை ரூபாய் 1.51 கோடி செலவிலே 20-2-2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. விடுதலைப் போராட்ட வீரர் கோபால் நாயக்கர் அவர்களின் மணி மண்டபம் ரூபாய் 69 இலட்சம் செலவில் 20-2-2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாருடைய மணிமண்டபம் ஓமந்தூரில் ரூபாய் 69 இலட்சம் செலவில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் மகாமகம் பல்நோக்கு கலையரங்கம் கும்பகோணத்தில் ரூபாய் 63 இலட்சம் செலவில் 20-2-2013 அன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இப்படி தேசியத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் பாடுபட்ட தலைவர்களை மதித்து நடத்துகின்ற தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்குகின்ற காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கின்ற கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.*

திரு. கே. கோபிநாத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரப் போராட்ட தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டுவதற்கு அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லிக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய சகோதரி செல்வி கே. பாலபாரதி அவர்கள் காங்கிரஸ்காரர்களுக்கு முன்னாலேயே சுதந்திரப் போராட்டத்தில் போராடியவர்கள் என்றார்கள். நாங்கள் அதை மறுக்கவில்லை. சுதந்திரப் போராட்டத்தில் காங்கிரஸ்காரர்களுடைய பங்கு மிகவும் அதிகம் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நேற்று இந்த அவையிலே நான் இல்லை. தயவு செய்து எனக்கு ஒரு நிமிட நேரம் பேசுவதற்குத் தாருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் என்னுடைய தொகுதிக்கு ஒரு Arts College *கொடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)* Madam, I salute you for the endowment of benevolence and a long cherished dream of Hosurians has been fulfilled by thy grace. We are indebted to your kind self and are ever grateful to you.

(உறுப்பினர் தொடர்ந்து தெலுங்கில் பேசினார்.)

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 191, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

191—

தங்கும் விடுதிகள்

***6407—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூரில் தொழிலாளர்களுக்கு தங்கும் விடுதிகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?